மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கல்லூரிகளிலும் மேல் நிலைப்பள்ளிகளிலும் கல்வி பயிலும் ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகை உரிய நேரத்தில் காலதாமதமின்றி வழங்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது' என்று இந்த அரசு உணர்ந்திருந்தாலும் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதை உணரவில்லை. எனவே அதை இந்த அரசு உணர்த்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் கொடுத்தால், உரிய நேரத்தில் உதவித் தொகையை கொடுக்கவும் கடன் வசதிகளைக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் நகரில் டையிங்-பிளீச்சிங் கம்பெனிகள் வெளியேற்றும் கழிவு நீர்.

*962. திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரில் டையிங்-பிளீச்சிங் கம்பெனிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடிநீர் மற்றும் பாசனக் கிணற்று நீர் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1990 சனவரி, 27]

(அ) ஆம்.

(ஆ) 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப்படி கழிவுநீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெற விண்ணப்பிக்காத 24 சாயத் தொழிற் சாலைகள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ள, தொழிற்சாலை களுக்கு கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விதிமுறைகளை மீறி இருக்கக்கூடிய நிர்வாகத்தின்மீது வழக்கு தொடர்ந்திருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அந்த வழக்கைப் பற்றி எல்லாம் அங்கே இருப்பவர்கள் கவலைப்படுவதில்லை. அதற்குரிய கட்டணம் என்பது அவர்கள் வருவாயோடு ஒப்பிடும்போது அது மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அதைக் கட்டி விட்டு, எல்லா விதிமுறைகளையும் மீறி தொடர்ந்து அங்கே இதுபோன்று கழிவுநீரை சுத்தப்படுத்தாமல் வெளியேற்றுகிற நிகழ்ச்சி தொடருகிறது. திருப்பூர் பகுதி மட்டுமல்லாமல், பல்லடம், அவிநாசி, பொங்கலூர் போன்ற பல பகுதி களுக்கு அது பரவிக் கொண்டிருக்கிறது. அரசின் சார்பிலே இதுபற்றி அமைக்கப்பட்ட, டாக்டர் சாந்தப்பா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுகூட இந்த நிலை தொடருமேயானால், இன்னும் 10 ஆண்டுக் காலத்தில் திருப்பூர் பகுதி என்பது ஒரு கடுமையான தோல் வியாதிக்கு ஆளாகி, அந்தப் பகுதி குடியிருப்பதற்குத் தகுதியற்ற ஒரு பகுதியாக மாறுகிற அபாயம் இருக்கிறது என்று கூடக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசு இதை அறிந்திருக்கிறதா? இவ்வளவு ஆபத்தான நிலையை உணர்ந்து அதற்குரிய வேகத்தோடு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

10-35 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனுமதி வழங்கப்பட்டிருக்கிற அந்தத் தொழிற்சாலைகளில் 26 இடங் களில் இது போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. மற்ற வழக்கு தொடரப்பட்டிருக்கிற இடங்களிலே அந்த வழக்குகளைத்துரிதப்படுத்துவதற்காக, தீர்ப்பு களை துரிதமாகப் பெறுவதற்காக இந்த அரசு முயற்சிகளை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கிற பேக்டரிகளில்கூட அது இயங்கவில்லை என்பதுதான் நடைமுறையில் இருக்கிற உண்மை. நான் நேரிலேயே அங்கே பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே வாய்ப்பு இருக்குமானால்அமைச்சர் அவர்கள் நேரிலே வந்தால் அவர்களுக்கும் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். அத்தோடு அங்கே சின்ன தொழிற்சாலைகளாக 200-க்கும் மேற்பட்டவைகள் இருக்கின்றன. சிறிய தொழிற்சாலைகளாக இருக்கிற காரணத்தால் மூலதனமின்மை காரணமாக அவை பொருத்தப்படாமல் இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு, தொழில் வளர்ச்சியையும் கணக்கிலேகொண்டு அரசு நிதி உதவி செய்து, அந்த சுத்திகரிப்பு நிலையங்களை அரசே ஏற்படுத்தி, அதற்குரிய கட்டணங்களை அந்த சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய முறையை அரசு கொண்டு வருமானால், நிச்சயமாக தொழிற்சாலைகளையும் பாதுகாக்க முடியும். அந்தப் பகுதி மக்களுடைய நிலத்தடி நீரையும் பாதுகாக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதைச் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே அரசினுடைய நிலைமை மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. ஏனென்றால் மாசு கட்டுப்பாடு வாரியம் உடனடியாக இவைகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் தொழிற்சாலைகளை மூட வேண்டிய ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுகின்றது. அப்படி மூடப்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே வந்து அவைகளை உடனடியாகத் திறப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைப்பார்கள். ஆகவே அந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் அரசே அவர்களோடு பேசி எந்த அளவுக்குக் கண்டிப்பாக வலியுறுத்த முடியுமோ அந்த அளவுக்கு வலியுறுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு செல்லுகிற இடங்களிலே எல்லாம் நேரிலேயே சென்று பார்த்து நடவடிக்கை எடுக்கிறோம். திருச்சியிலே ஒரு இடத்திற்குச் சென்றபோதுகூட ஒரு தொழிற்சாலைக்குச் சென்று அதை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இதேபோன்று குறிப்பிட்ட ஆலைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபாடுகளைச் சொன்னார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இந்தத் துறை நேரிடையாக நடவடிக்கை எடுத்து அவைகளை செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.